**<u>சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை</u>**

**<u>OS.NO.253/2020</u>** **தேதி.**01.12.2025

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி. கலைவாணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு ............... பி.சா.1 ...................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2025ம் ஆண்டு 01.12.2025ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | | |
|---|---|---|
| பெயர் | | திரு.வேதாத்ரி |
| த/பெ. | | திரு.தாமோதர ராவ் |
| வயது | | 61/2025 |

துவக்க நேரம் 2.55 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :–

1. நான் என் தரப்பில் தாக்கல் செய்துள்ள கடந்த 1975 ஜனவரி மாதம் முதல் 2022 ஏப்ரல் மாதம் வரை வில்லங்க சான்றிதழ் (பி.த.வா.ஆ.3) தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் இந்த சான்றிதழில் இவ்வழக்கின் 1ம் பிரதிவாதியாகிய நான் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொதுஅதிகார பத்திரத்தில் உள்ள ஜக்பந்தியும், இதே ஆவணத்தோடு இணைக்கப்பட்டுள்ள கடந்த 1950 முதல் 1966 வரையிலான கைவில்லங்கத்தில் சர்வே எண்.114/1க்கான ஜக்பந்தியும் வெவ்வேறானது என்றாலும், முரண்படுகிறது என்றாலும், சரியல்ல. அனைத்து வில்லங்கத்திலும் ஒரே மாதிரியாகதான் உள்ளது.

2. பாஸ்கர ராவ் என்பவர் முனுசாமி என்பவருக்கு கடந்த 22.03.1960ல் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் கண்டுள்ள ஜக்பந்தியும், நான் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொதுஅதிகார பத்திரத்தில் கண்டுள்ள ஜக்பந்தியும் ஒரே ஜக்பந்திதான் என்றால் பைமாஸ் நெ.94ல் மொத்தம் ஏக்.01.11 ஆகும். இதில் மொத்தமுள்ள சொத்தின் கிழக்கு பகுதியில்

ஏக்.0.55 1/2 நிலத்தை பாஸ்கர ராவ் முனுசாமிக்கு எழுதிக்கொடுத்தார். மீதி ஏக்.0.55 1/2 நிலம் மேற்கில் அப்படியே உள்ளது.

3. முனுசாமி கிரையம் வாங்கிய சொத்திற்கு ஜக்பந்தி என்ன என்றால் முனுசாமி நிலத்திற்கு கிழக்கில் கண்ணன் நிலம் உள்ளது. மேற்கில் மீதி உள்ள ஏக்.0.55 1/2 நிலமும், பாட்டையும், தட்சமானியமும், நாகம்மாள் நிலமும் உள்ளது. தெற்கில் ராமசாமி உடையார், வரதஉடையார் நிலங்களும் உள்ளன. வடக்கில் வரதஉடையார் நிலமும், நாகம்மாள் நிலமும் உள்ளது. நான் எனது எழுத்துமூல சாட்சியத்தில், தாவா சொத்திற்கு மேற்கில்தான் முனுசாமி நிலம் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் தாவா சொத்திற்கு கிழக்கில் முனுசாமி நிலம் உள்ளதாகவும், முனுசாமி நிலத்திற்கு கண்ணன் நிலம் உள்ளதாகவும் சொல்லியுள்ளேன். நான் சொல்வது தவறு என்றாலும் தாவா சொத்திற்கு மேற்கில் முனுசாமி நிலம் உள்ளதாக நான் எனது எழுத்துமூல சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் தற்பொழுது மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

4. தாவா சொத்திற்கு மேற்கே உள்ள சர்வே எண்கள் 111 மற்றும் 115 உள்ளது என்றால் தெரியவில்லை. தாவா சொத்திற்கு மேற்கில் பிச்சாண்டி, பாலு, பீமன் ஆகியோர்களின் வீடுகளும், நிலங்களும் உள்ளது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது.நான் 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த பொதுஅதிகார பத்திரத்தில் நான் குறிப்பிட்டுள்ள பாட்டை தாவா சொத்திற்குள் உள்ளது என்றால் சரியல்ல. மேற்கில் உள்ளது. அந்த பாட்டை சொத்தோடு சேர்ந்ததா என்றால் ஆமாம்.

5. அந்த மண் பாதை பாட்டை 8 அடி அகலம் இருக்கும் என்றால் சரியல்ல. 3 அடி அகலம் இருக்கும். மண் பாதை பாட்டை வழியாகத்தான் 2ம் வாதியின் கோழிப்பண்ணைக்கு லாரி மூலமாக கோழிப்பண்ணைக்கான அனைத்து பொரும்களும் ஏற்றிவருப்படுகிறது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. வழக்கு சொத்திற்கு கிழக்கில் கண்ணன் நிலத்தில் 2 கோழிப்பண்ணைகள் உள்ளது என்றால் ஆமாம் பார்த்துள்ளேன். அந்த கண்ணன் நிலத்தில் உள்ள 2 கோழிப்பண்ணைகளுக்கும் தாவா சொத்து வழியாகதான் பொருட்கள் ஏற்றிச்செல்லப்படுகிறது என்றால் அங்கு நடைபாதை உள்ளது. கோழிப்பண்ணைக்கு பொருட்கள் எடுத்துக்செல்கிறார்களா என்று எனக்கு தெரியாது.

6. வழக்கு சொத்து வேறு, முனுசாமி கிரையம் பெற்ற சொத்து வேறு என்று நான் எனது சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ள நிலையில் இந்த தகவலை நான் எனது பதிலறிவிப்பிலும், எதிர்வழக்குரையிலும் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் வெகுநாட்கள் ஆனதால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது தந்தை எனக்கு எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்திலும், அந்த சொத்து எனது தாத்தாவிற்கு சொந்தமான சொத்து என்று குறிப்பிட்டு எழுதியுள்ளாரா என்றால் எழுதவில்லை. எனது அப்பா எந்த உரிமையின் அடிப்படையில் எனக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தார். மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தாக எழுதப்பட்டுள்ளதா என்றால் அப்படி எழுவேண்டிய அவசியமில்லை. எற்கனவே வாய்மொழிபாகம் பிரிந்துவிட்டது. அதனால் பாகப்பிரிவினை மூலம் கிடைக்கப்பெற்ற சொத்தாக எழுதவேண்டிய அவசியமில்லை. எனது அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் உண்மையில் வாய்மொழிபாகம் பிரிந்திருந்தால் அந்த வாய்மொழிபாக பிரிவினையை குறிப்பிட்டு இந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எழுதியிருப்பார்கள் என்றாலும், அவ்வாறு நடைபெறாததால்தான் பாகப்பிரிவினை குறித்த எந்த வாசகமும் குறிப்பிட்டு எழுதவில்லை என்றாலும் சரியல்ல.

7. என் பெயரில் உள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கணினி, பட்டா எண்.290, சிட்டா, கிடைக்கப்பெற்று அனுபவித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், கணினி வந்த பிறகுதான் அனுபவித்ததாக இந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் உள்ளது என்றாலும், காலம்காலமாக அனுபவித்து வந்ததாக சொல்வது தவறு என்றாலும் சரியல்ல. என் தந்தை பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் காலம்காலமாக இருப்பதாக சொல்வதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சிட்டா தாக்கல் செய்துள்ளேன். சிட்டாவில் வேத்திரி ராவ் மகன் தாமோதர ராவ் என உள்ளது.

8. எனது அப்பா பெயரில் சிட்டா வருவதற்கு முன்பு யார் பெயர் இருந்தது என்றால் UDR திட்டத்தில் வேத்திரி ராவ் மகன்கள் தாமோதர ராவ் மற்றும் பாஸ்கர ராவ் என இருந்தது. அந்த இருவர் பெயரிலும் உள்ள UDR பட்டாவை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கடந்த 2014ம்

ஆண்டு நான் நிலத்தை அளவீடு செய்ய வந்ததாகவும், அப்பொழுது 1ம் வாதி கண்ணனை பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றாலும், அப்பொழுதும், தாமோதர ராவ் மற்றும் பாஸ்கர ராவ் பெயரில் கூட்டுப்பட்டாக இருந்ததா என்றால் இருந்திருக்கலாம்.

9. கடந்த 2014ம் ஆண்டு என் அப்பா சொத்திடம் வந்தாரா என்றால் இல்லை. கடந்த 2014ம் ஆண்டு 2ம் வாதி எங்களுடைய நிலத்தை அபகரித்து வைத்திருப்பதாக நான் நில அபகரிப்பு தடுப்பு பிரிவில் புகார் கொடுத்திருந்தேன் என்றால் புகார் கொடுத்தது உண்மைதான். நிலத்தை அபகரிக்க முயற்சிப்பதாகதான் புகார் கொடுத்தேன். நான் கொடுத்த புகாரின்பேரில் போலிசார் வழக்கு பதிவு செய்தார்களா என்றால் இல்லை.

10. நான் புகார் கொடுத்தபின்னிட்டுதான் எனது தந்தை பெயரில் தனிப்பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். எனது அப்பா வாதிகளுக்கு எதிராக எந்த புகாரையும் கொடுக்கவிலலை என்றால் சரிதான். என அப்பா சார்பாக நான்தான் புகார் நான்தான் கொடுத்தேன். எனது அப்பா பெயரில் பட்டா வாங்க மனு கொடுத்தாரா என்றால் இல்லை. அவர் பெயரில் பட்டா வழங்க நான்தான் மனு கொடுத்தேன்.

11. எனது தந்தை வழக்கு சொத்தை எந்த காலத்திலும் அனுபவித்ததில்லை என்றால் சரியல்ல. வயது முதிர்வால் தற்பொழுது வருவதில்லை. தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள கண்ணன் சொத்திற்கு, தாவா சொத்து வழியாகத்தான் செல்லவேண்டுமென்றால் அவர் தாவா சொத்து வழியாக செல்வதை நான் இதுவரை பார்த்ததில்லை. தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் ஏதேனும் இதுவரை வரி செலுத்தப்பட்டுள்ளதா என்றால் செலுத்தியுள்ளோம். அந்த வரி ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஒரே ஒரு வரி ரசீதை தாக்கல் செய்துள்ளேன்.

12. கடந்த 2014 முதல் 2020 வரை தாவா சொத்தை அளவீடு செய்ய முடியாததால் நான் 2020ம் ஆண்டுதான் உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன் என்றால் 2014ம் ஆண்டு உரிய அரசு அலுவர்கள் மூலம் நிலத்தை அளவீடு செய்தேன். 2020ம் ஆண்டு மனு தாக்கல் செய்தது உண்மைதான். 2014ம் ஆண்டு நான் அளவீடு செய்திருந்தால், 2020ம்

ஆண்டு மனு தாக்கல் செய்ய வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. நான் இன்றுவரை தாவா சொத்தை அளவீடு செய்யவில்லை என்றாலும், அதற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும், அளவீடு செய்ய முயற்சிப்பதால் அளவீடு செய்யாமல் நான் திரும்பி சென்றுவிட்டேன் என்றாலும் சரியல்ல.

13. கடந்த 2020ம் ஆண்டு உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ய என்ன காரணம் என்றால் நான் பொதுஅதிகாரம் கொடுத்தேன் என்றாலும், அதிகாரம் கொடுத்த நபருக்கு எல்லை கல்லை காட்டவேண்டும் என்பதற்காக மீண்டும் அளவீடு செய்ய மனு தாக்கல் செய்தேன்.

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கவேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்திவகைப்படுகிறது.

முடிவு நேரம் 4.30 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.